# வாழை

பொது அறிவுத்
துணுக்கு
குட்டிக் கதைகள்

பங்குனி
குட்டி. 1
07. 03. 97



சிறப்புக் கட்டுரை
குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே...
ஆங்கிலம், டொச் மொழி வளம்.

**மாத சஞ்சிகை**

# ஐரோப்பா வாழ் அன்புச் சிறார்களே!..

உங்களுக்கு தெரியுமல்லவா?.. காதில் அணியும் தூக்கணம் போன்ற ஒரு மலர் ஐரோப்பிய நாடுகளில் பங்குனியில் மலர்கிறது. Schneecoldock என்று அழைப்பார்கள் எமது மொழியில் பனிமலர் என்றே கூறுவோம். அந்த பூவின் மலர்வில். குளிரும் வசந்தமும் கைகுலுக்கிக் கொளளளும். வசந்தம் புன்னகைத்து "குளிரே மீண்டும் சந்திக்கும் வரை சென்று வா" என்று குளிருக்கு விடை கொடுக்கும். இந்த பங்குனி மாத பனிமலர் போன்று இளவேனில் வருகையுடன் உங்கள் விழிகளின் பார்வையில் வாழை!..

வாழையின் பிஞ்சு வாசக நெஞ்சங்கள்நீங்கள்!
இது வாழையாக இருந்தால்.. நீங்கள் வாழைக் குட்டிகள் அல்லவா? வாழைக்கு குளிர் ஒத்து வராது. அதிக வெய்யிலில் உயிர் வாழ்வதற்கும் அடிக்கடி நீர் பாச்ச வேண்டும். இக்குளிர் சூழலில் அறை வெப்ப நிலையில் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் புலம் பெயர்ந்து இருக்கிறோம். தாய் மண்ணில் இருந்து நீங்கள் புலம் பெயர்ந்திருப்பது போல.
"பிள்ளைகளின் நெஞ்சம் வெள்ளைநிறம் போன்றது. கள்ளம் கபடம் அற்றது. வஞ்சகம் இல்லாதது" என்பார்களே இந்த வாழையும் அப்படித்தான் வெளிக்கு பச்சைப் பசேல் என்றிருக்கும். ஆனால் உள்ளம் தனி வெள்ளை.
தாய் மண்ணின் வாசனையுடன். தான் வாழும் சூழலின் விழுமியங்களையும் நுகர்ந்து. இருட்டில் ஒளிரும் வெள்ளியாக உங்களிடம் வந்திருக்கிறது வாழை. பனிப்புகார்களின் குவியலுக்குள் அடங்கிப் போயிருக்கும். இந்த ஒளிர்வு வானவில்லின் வர்ணங்களுடன் இணைந்து மேலும் பிரகாசிப்பதற்கு தமிழ் மீதும் தமிழ்ச் சிறார்கள் மீதும் நேசம் கொண்ட பெற்றோர்கள், சிறார்கள், பெரியோர்கள், அனைவரதும் ஆதரவை நாடி நிற்கிறது வாழை.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை.

உங்கள் "வாழை அம்மா"

# திருக்குறள்

தமிழ்மறை எனப்போற்றப்படும் திருக்குறளை இவ்வுலகிற்கு தந்தவர் மயிலாப்பூரில் பிறந்து, மதுரை தமிழ் சங்கத்தில் சிறப்புற அமர்ந்திருந்த திருவள்ளுவர் ஆவார். ஆயிரத்து முன்நூற்று முப்பது (1330) குறள்களையும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில், பத்துப் பத்தாக தந்திருக்கிறார்.அவற்றை அதிகார வரிசைப்படி மாதம் இரு குறள்களாக எளிய உரையுடன் தருகிறோம். எல்லாக் குறள்களும் ஏழு சொற்களால் ஆனவை என்பது சிறப்பம்சம் ஆகும்

### அதிகாரம்:- 1 கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
   பகவன் முதற்றே உலகு


பொருள்: -

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை
முதலாகக் கொண்டு விளங்குகின்றன.
அதைப்போல, எல்லாவற்றிற்கும் ஆதி
காரணமாக விளங்கும் பகவானையே
முதலாகக் கொண்டு விளங்குகின்றது உலகம்.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
   நற்றாள் தொழார் எனின்

பொருள்: -

தூய அறிவு வடிவாய் விளங்கும் இறைவனுடைய
திருவடிகளை ஒருவன் பற்றி நின்று நாளும்
தொழுது எழவில்லை என்றால், அவன் கற்ற
கல்வியால் விளையக்கூடிய பயன் என்ன?



## அம்புலி மாமா

அம்மா வெளியேவா வா அம்மா.
அழகாய் மேலே பாரம்மா.
சும்மாய் இருந்த சந்திரனை
துண்டாய் வெட்டியதாரம்மா.
-அம்மா

வட்டத்தோசை சுட்டது போல்
வானில் இருந்த சந்திரனை
துட்டச்சிறுவன் யாருடைத்தான்
சொல்வாய் இனிமை தோன்றிடவே
-அம்மா

மட்டிப்பயலவன் வெட்டிவிட்டு
மற்றப்பாதியை எங்கெறிந்தான்
கிட்டமினுங்கும் கட்டியெல்லாம்
வெட்டிய மிச்சத்துண்டுகளோ
-அம்மா

அல்வாய்யூர் கவிஞர் மு.செல்லையா

# தமிழ் எண்கள் எவை?

| | |
|---|---|
| 1. க | 10. க0 |
| 2. உ | 100. க00 |
| 3. ங | 1000. க000 |
| 4. ச | 3/4. ஙு |
| 5. ரு | 1/2 இ |
| 6. சா | 1/4 வ |
| 7. எ | |
| 8. அ | |
| 9. சு | |

மோட்டார் வாகனங்களில் இருக்கும் இலக்கத்தகடுகளை முதலில் அறிமுகப் படித்தியவர்கள் பிரான்ஸ் நாட்டினரே. ஆரம்பகாலத்தில் வாகன உரிமையாளர்களின் பெயர் முகவரி போன்றவையே பொறிக்கப் பட்டுடிருந்தது.1893ம் ஆண்டின் பின்புதான் இலக்கங்கள் பொறிக்க வேண்டும் என்பதை கட்டாய சட்டமாக அமுல் படித்தினர்.



## உலகில் மிகப் பெரியவை

- உலகில் மிகப் பெரிய கண்டம் எது?
  ஆசியாக் கண்டம் ஆகும்
- உலகில் மிகப் பெரிய சமுத்திரம் எது?
  பசிபிக் சமுத்திரம் ஆகும்
- உலகில் மிகப் பெரிய தீவு எது?
  அவுஸ்ரேலியா தீவு ஆகும்
- உலகில் மிகப் பெரிய சிகரம் எது?
  எவரெஸ்ட் சிகரம் ஆகும்
- உலகில் மிகப் பெரிய மலை எது?
  இமயமலை ஆகும்
- உலகில் மிகப் பெரிய நதி எது?
  அமேசன் நதி ஆகும்
- உலகில் மிகப் பெரிய ஏரி எது?
  காஸ்பியன் ஏரி ஆகும்
- உலகில் மிகப் பெரிய பாலைவனம் எது?
  சஹாராப் பாலைவனம் ஆகும்

# தமிழ்மொழி மூலம் ஆங்கிலம், ஜேர்மன் கற்போமா..

E (English) ஆங்கிலம்

D (Deutsch) டொச்

## present continuous (I am doing)

1. She is driving to work. (E)
- sie fährt zur Arbeit (D)
- அவள் வாகனத்தில் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறாள்.

௨. please don´t make so much noise. I am working. (E)
- Bitte machen sie nicht so viel Lärm,Ich arbeite . (D)
- தயவு செய்து பெரிய சத்தம் எழுப்பாதிர்கள் நான் வேலை செய்து கொண்டிருக்கிறேன்.

3. where is kala? She is having a bath. (E)
- wo ist kala? sie badet gerade. (D)
- கலா எங்கே? அவள் குளித்துக் கொண்டிருக்கிறாள்.

4. Let´s go out now. It is not raining anymore. (E)
- Gehen wir aus, es regnet nicht mehr. (D)
- இப்போ நாங்கள் வெளியே போவோம். இனியும் மழை பெய்யாது.

5. Are you enjoying the party? (E)
- Geniessen sie die Party? (D)
- விருந்தில் சந்தோசமாக இருந்து கொண்டிருக்கின்றீர்களா?

6. I am tired. I am going to bed now. (E)
- Ich bin müde, Ich gehe ins Bett. (D)
- நான் களைப்பாக இருக்கின்றேன். நான் நித்திரைக்குப் போகின்றேன்.

7. Ravi and Rajha are talking in a café. (E)

- Ravi und Rajha sprechen mit einanderen in einem café. (D)
- ரவியும் ராஜாவும் தேனீர்ச் சாலையில் இருந்து கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

8. I am reading an interesting book at th moment.(E)

- Ich lese im Moment ein interessantes Buch. (D)
- தற்சமயம் நான் ஒரு சுவாரசியமான (விருப்பத்திற்குரிய) புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

9. Kathir wants to work in canda, so he is learning English. (E)

- Kathir möchtet in canda arbeiten, so lernt er Englisch. (D)
- கதிர் கனடாவில் வேலை செய்ய வேணும். ஆகவே அவன் ஆங்கிலம் படித்துக் கொண்டிருக்கிறான்.

10. Some friends of mine are building their own house. (E)

- Freunde von mir bauen Ihr eigenes haus. (D)
- என்னுடைய நண்பர்களில் சிலர் அவர்களுடைய சொந்த வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

11. You are working hard today. (E)

- Sie arbeiten heute schwer. (D)
- நீங்கள் இன்று கடினமாகவேலை செய்து கொண்டிருக்கிறீர்கள்.

12. Is sumathy working this week? (E)

- Arbeitet sumathy diese woche? (D)
- சுமதி இந்தக் கிழமை வேலை செய்கிறாளா?

13. The population of the World is risiing very fast. (E)

- Die Welt bevölkerung steigt sehr rasch. (D)
- உலக சனத்தொகை வேகமா அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

14. Is your English getting better? (E)

- Ist Ihr Englisch besser? (D)
- உங்களுடைய ஆங்கிலத்தில் முன்நேற்றம் இருக்கா?

15. I am looking for sumathy. Do you know where she is? (E)

- Ich suche sumathy. wissen sie, wo sie ist? (D)
- நான் சுமதியை தேடிக்கொண்டிருக்கிறேன். உங்களுக்குத் தெரியுமா அவள் எங்கே என்று?

16. It is getting dark. Shall I turn on the Light? (E)

- Es wird dunkel.Soll ich das Licht einschalten? (D)
- இருண்டு கொண்டிருக்கிறது. நான் மின்விளக்கைக் (Light) போடட்டுமா?

17. They haven't got anywhere to live at the moment. They are staying with friends until they find - -somewhere. (E)

- Sie wohnen in Moment nirgendwo, sie wohnen- -bei Freunden bis sie etwas finden. (D)
- அவர்களுக்கு தற்சமயம் வசிப்பதற்க்கு ஓர் இடமும் இல்லை. அவர்கள் வேறு இடம் கிடைக்கும் வரை நன்பர்களுடன்- -தங்கிக் கொண்டிருக்கிறாகள்.

18. Are you ready, Kala? `yes, I am coming.' (E)

- Sind Sie bereit,kala? Ja, ich komme. (D)
- காலா நீங்கள் தயாரா? ஆம், நான் வருகிறேன்.

19. Have you got an ambrella? It is starting to rain. (E)

- Haben Sie einen Regenschirm? es biginnt zu regen.(D)
- குடை வைத்திருக்கின்றீர்களா? மழை பெய்ய ஆரம்பிக்கிறது.

20. You are making  a lot of noise. could you be quieter? I am trying to concentrate. (E)

- Sie machen viel Lärm, könnten sie stille sein? Ich versuche mich zu konzentrieren. (D)
- நீங்கள் ரொம்பவும் சத்தம் எழுப்பிக் கொண்டிருக்கின்றீர்கள்.

21. Why are you looking at me like that? (E)

- Warum schauen sie mich so an? (D)
- ஏன் நீங்கள் என்னை இப்படிப் பார்க்கினறீர்கள்?

22. Is anybody listening to the radio or can I turn it off ?(E)

Hört jemand Radio oder kann ich ihn ausschalten? (D)

- யாராவது வானொலி கேட்டுக் கொண்டுடிருக்கின்றீர்களா–
  –அல்லது நான் அதை நிற்பாட்டட்டுமா?


23. How is your English? Is it getting better? (E)

- Wie ist Ihr Englisch ? geht es besser? (D)
- எப்படி உங்களுடைய ஆங்கிலம்? அதில் முன்னேற்றம்–
  –இருக்கா?

24. How is your new job? Not so good at the moment.  I am not enjoying it very much. (E)

Wie ist Ihre neue Arbeit? nicht so gut im Moment, sie gefällt mir nicht sehr gut. (D)

எப்படி உங்களுடைய புது வேலை? தற்சமயம் அது நல்லதாகவில்லை அந்தவேலை எனக்குப் பிடிக்கவில்லை.

## அ,ஆ.. 

அ,ஆ என்றேனே.
அத்தை வீடு சென்றேனே.

இ,ஈ என்றேனே.
இட்டலி எட்டு தின்றேனே

உ ,ஊ என்றேனே.
உடனே காப்பி குடித்தேனே.

எ,ஏ என்றேனே.
ஏப்பம் நன்றாய் விட்டேனே.

ஐ என்று சொன்னேனே.
ஆங்கே நீட்டிப் படுத்தேனே.

ஒ,ஓ என்றேனே.
ஓருமணி சென்று எழுந்தேனே.

ஔ என்று சொன்னேனே.
ஆடிப் பாடிக் குதித்தேனே.

ஃ என்று சொன்னேனே.
அக்கக் காவெனச் சிரித்தேனே!




# நாடு ஒன்று

# தீவுகள் 200

**மாலெதீவுகள்:**

இந்து சமுத்திரத்தில் இலங்கைக்கு தென்மேற்குத் திசையில் சுமாராக இரண்டாயிரம் சிறிய தீவுக்களைக் கூட்டமாகக்கொண்ட ஒரு நாடு. இவற்றுள் இருனூறு தீவுகள் மட்டும் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் உள்ளது.

| | |
|---|---|
| தலைநகர்: | மாலே |
| பரப்பளவு: | 298 சதுர கிலோமீற்றர் |
| மக்கள் தொகை: | 234000 |
| மொழிகள்: | ஆங்கிலம், மாலதீவு மொழி |
| மதம்: | இஸ்லாம் (சுனித்தன்) |



வரலாறு: 1187ல் இருந்து பிரித்தானியர்களின் காலணிக்கு உட்பட்டு 1965ல் சுதந்திரம் அடைந்தது. இன்று ஜானாதிபதி ஆட்சி முறையைக் கொண்ட குடியரசு நாடாக திகழ்கிறது.


பொருளாதாரம்: மீன்பிடி, பழ உற்பத்தி, கருவாடு, கொப்பறா ஏற்றுமதி, மற்றும் உல்லாசப் பயணிகளின் வருகையாலும் அன்னியச் செலாவணி சேமிக்கப்படுகிறது.

# சிங்கமும் முயலும்

ஒரு சிங்கமும் ஒரு முயலும் வெகு சிநேகமாக இருந்தன. முயலுக்கு ஒரு சந்தேகம் வெகு நாளாக இருந்தது. அந்தச் சந்தேகத்தைச் சிங்கத்திடமே கேட்டது. "ஆமாம், காகத்தின் சத்தம் கேட்டவுடன் ஏன் நீங்களெல்லாம் பயந்து ஓட ஆரம்பித்து விடுகிறீர்கள்?" என்று கேட்டது.

"ஆமாம், ஆமாம். அது உண்மைதான். எங்களைப் போல இருக்கும் பெரிய பிராணிகளுக்கு ஒரு வித பயம் உள்ளூர இருக்கத்தான் செய்கிறது. இது புரியாத புதிர்தான். பாரேன், யானை எவ்வளவு பெரிய மிருகம். பன்றியின் சாதாரண முனகலே யானையை அலற அடித்துவிடும். என்ன செய்வது?"

"ஓகோ, அப்படியா! இப்பொழுதுதான் எனக்குக்கூடப் புரிகிறது எங்கள் கஷ்டம். இந்த அற்பப் பிராணி நாயைக் கண்டாலே நாங்கள் பயப்படுவதின் காரணம் இப்பொழுதல்லவா புரிகிறது" என்று முயல் கூறியது.




## தெரிந்து கொள்ளுங்கள்!!!

## TIERISCHE FRAGEN

## விலங்குகள் பற்றி சில வினாக்களும்? விடைகளும்!

1,Warum können Frösche so lange unter Wasser bleiben?
தவளைகள் தண்ணீரில் நீண்ட நேரம் அமிழ்ந்திருப்பது எதனால்?


2,Wie viele Eier legt ein huhn im Durchschnitt jährlich?
ஒருவருடத்தில் ஒரு கோழி சராசரியாக எத்தனை முட்டைகளை இடுகிறது?



3,Welche Grosskatze wird länger als drei Meter?
மூன்று மீற்றர் நீளமுடைய பூனை இனத்தைச் சேர்ந்த விலங்கு எது?

4,Wie lange schläft eine Ameise täglich?
எறும்புகள் நாளொன்றுக்கு எவ்வளவு நேரம் நித்திரை கொள்கின்றன?


5,Wie weit kann ein Känguruh springen?
கங்காரு விலங்கு (ஆகக்கூடியது) எவ்வளவு தூரம் பாய் கிறது?



6, Welche Säugeier kann fliegen?
எந்த பாலூட்டி மிருகம் பறக்கக்கூடியது?

7, Wie alt kann eine Schildkröte im Durchschnitt werden?
ஆமைகளில் பேரினத்தைச் சேர்ந்தவைகள் சராசரியாக எவ்வளவு காலம் உயிர்வாழ்கின்றன?

8, Können Wespen wie Bienen auch nur einaml stechen, weil sie dann sterben?
குளவிகள் ஒருதடவைக்கு மேல் கொட்டுவதுபோல், தேனீக்கள் கொட்டுவதில்லை. தேனீக்கள் ஒருதடவை கொட்டியவுடன் இறந்துவிடுகின்றனவா?



9, Der Gepard ist einer der sehnellsten Läufer der Landsäugetiere. Welche Höchstgeschwindigkeit kann er erreichen?
நிலவாழ் பாலூட்டிகளில் மிகவும் வேகமாக ஓடுகின்ற சிறுத்தைப்புலியின் மணித்தியால வேகமென்ன?

10, Wie alt kann eine Ameisenkönigin werden?
ராணி எறும்புகளின் சராசரி வயது என்ன?



## **Auflösungen-** விடைகள்


1. Weil sie den Sauerstoff im Wasser durch die Haut einatmen.
   தண்ணீரில் இருக்கும் பிராணவாயுவை தோல்மூலம் சுவாசிக்கும் ஆற்றல் தவளைகளுக்கு இருப்பதனால்.
2. Ein Huhn legt jährlich bis zu 200 Eier.
   ஒருகோழி ஒருவருடத்தில் சராசரியாக 200 முட்டைகளை இடுகிறது.



3. Der Tiger. புலி
4. Drei Stunde. மூன்று மணிநேரம்
5. Riesenkänguruhs können bis zu zehn Meter Weit und drei Meter hoch springen.
   சராசரியாக 3 மீற்றர் உயரத்தில் 10 மீற்றர் தூரத்திற்கு கங்காரு பாய்கிறது.




6. Die Fledermaus. வௌவால்
7. Bis zu 3000 Jahre.
   ஆமைகள் சராசரியாக 3000 ஆண்டுகள் உயிர்வாழ்கின்றன.



8. Nein, Wespen können mehrmals stechen, sie verlieren ihren Stachel nicht.
குளவிகள் தமது குத்தும் கூர்களை குத்துவாங்குபவரின் உடலில் செலுத்துவதில்லை. ஆனால் தேனீர்க்கள் தமது குத்தும்கூர்களை உடம்பில் செலித்திவிடுவதனால், அதுவளர்வதற்கான காலம் வரை அதனால் மீண்டும் கொட்ட முடிவதில்லை.

9, Er erreicht eine Geschwindigkeit von etwa 100 km/h,
die er aber nur über kurze Strecken durchhalten kann.
சிறுத்தைப்புகளின் ஆகக்கூடிய வேகம் மணிக்கு 100 கி. மீற்றர் ஆயினும், மிகக் குறைந்தளவு துாரத்தையே இவ்வேகத்தில் ஓடுகிறது.



10, Bis zu 17 Jahre.
ராணி எறும்புகளின் சராசரி வயது 17வருடங்கள் ஆகும்.

p.அலெக்ஸ் மொழிமாற்றம் செய்து தொகுத்தனித்தவர்

## ஆங்கிலம்

குறிப்பு 1) Present continuous என்றால் ஒரு செயல் அதைப் பற்றிக் கதைக்கும் அதே நேரத்தில் நடந்து கொண்டிருக்கும் என்பதைக் குறிக்கும்.

Am/ is/ are-ing is the present continuous.
(நான்) I am
(அவன்)he/ (அவள்)she/ (அது)it/ -is
(நாங்கள்)we/(நீ,நீங்கள்)you/ (அவர்கள்)they/ - are

உ+ ம் I am driving.
he is working.
we are doing.

# Deutsch.

## Sein (இரு)

(நான்) Ich bin - (நாங்கள்) wir -sind

(நீ) du bist - (நீங்கள்) ihr - seid

(அவன்) er
(அவள்) sie ist - (அவர்கள்) sie - sind.
(அது) es

- (நீங்க) Sie - sind - (மரியாதைக்குரியது.)

## Haben (உதவி வினைச் சொல்)

Ich habe - wir haben
Du hast - ihr habt


Er / sie / es } hat - sie - haben

- Sie haben.

## உயிர் மெய் எழுத்து உருவானது எப்படி?

க்--------- அ--------- க
ங்--------- அ--------- ங
ச்--------- அ--------- ச
ஞ்--------- அ--------- ஞ
ட்--------- அ--------- ட
ண்--------- அ--------- ண
த்--------- அ--------- த
ந்--------- அ--------- ந
ப்--------- அ--------- ப
ம்--------- அ--------- ம
ய்--------- அ--------- ய
ர்--------- அ--------- ர
ல்--------- அ--------- ல
வ்--------- அ--------- வ
ழ்--------- அ--------- ழ
ள்--------- அ--------- ள
ற்--------- அ--------- ற
ன்--------- அ--------- ன


தொடரும்



## குதிரையும் கலைமானும்

கலைமானோடு குதிரை கோபித்துக் கொண்டது, ஆனால் வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடியாமல் மனிதனின் உதவியை நாடியது. மனிதன் அதற்க்கு சேணமும் கடிவாளமும் போட்டான்; அதன்பின்பு அதன்மீது ஏறி உட்கார்ந்து கலைமானை விரட்டிப் பிடித்துக் கொண்றான்.

கலைமான் மாண்டதைக் கண்டு மகிழ்ந்து குதிரை கனைத்தது; மனிதனுக்கு வந்தனம் செலுத்தியது; தன்கடிவாளத்தை நீக்கித் தன்னை விடுவிக்கும்படிக் கேட்டது. மனிதன் தலையை ஆட்டி, "முடியாது முடியாது. நீ எவ்வளவு உபயோகமாய் இருக்கிறாய்! உன்னை எப்படி விட்டுவிட முடியும்?" என்று கேட்டான்.



அன்றுமுதல் மனிதனுக்கு குதிரை அடிமையாய் இருக்கிறது. குதிரையின் வஞ்சம் தீர்ந்தது. ஆனால் தன் விடுதலையைப் பறிகொடுத்துதான் வஞ்சம் தீர்க்க முடிந்தது.

**கோபத்தை அடக்க வேண்டும் அல்லது கோபம் உங்களை அடக்கி விடும்**

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே..

டொக்டர் ஹெயிம் G. ஜிநோட் அவர்களது உலகப் பிரசித்தி பெற்ற குழந்தைகளின் உளவியலை புரிந்துகொள்வதனை நோக்கமாகக் கொண்ட "Between Parents and Child" என்ற நூலில் இருந்து "சரிநிகர்"பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சில அத்தியாயங்களை நன்றியுடன் தருகின்றோம்.

குழந்தைகளுடன் உரையாடுவது ஒரு தனிக்கலை. அதற்கு அதற்கே உரிய சட்ட திட்டங்களும், அர்த்தங்களும் உண்டு. குழந்தைகள் பெரும்பாலும் தமது உரையாடல்களின்போதும், அபிப்பிராயங்களைத் தெரிவிக்கையிலும் மிகவும் சாதுர்யமாகவே நடந்துகொள்கின்றனர். அவர்களது செய்திகள் பெரும்பாலும் புதிரானவை. சங்கேதத்தன்மை வாய்ந்தவை. கவனமாக மொழிபெயர்க்கப்பட வேண்டியவை.

ஆன்டி என்ற பத்துவயதுக் குழந்தை தனது தகப்பனிடம் இவ்வாறு கேட்டான். "ஹாலெம்' நகரில் உள்ள கைவிடப்பட்ட சிறுவர்களின் தொகை என்ன?"

ஒரு இரசாயனவியலாளரும் புத்திசீவியுமான அந்தத் தகப்பனாருக்கு இந்தக்கேள்வி மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது. சமூகப்பிரச்சனைகளில் தமது மகனுககுள்ள அக்கறை அவருக்கு சந்தோசமூட்டியதில் வியப்பில்லை. அவர் மகனுக்கு அதுதொடர்பாக நீண்ட விளக்கமொன்றை அளித்துவிட்டு அவனை நோக்கினார். ஆனால் அவனோ திருப்தியுற்றவனாகத் தெரியவில்லை. அதே விடயம் தொடர்பாக அவன் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தான். ' நியூயோர்க் நகரத்தில் எத்தனை குழந்தைகள்?' முழு உலகத்திலும்..'?

இறுதியில்தான் தனது மகனுடைய அக்கறை ஒன்றும் சமூகம் பற்றியது அல்ல. தனிப்பட்ட ஒன்று என்று புரிந்ததுதகப்பனாருக்கு.

கைவிடப்பட்ட சிறுவர்கள் மீதான அனுதாபத்தின் காரணமாக அவன் அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. அவனது கேள்வி தானும் கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகிவிடுவேனோ என்ற அச்சத்திலிருந்து எழுந்தது. அவன் எதிர்பார்த்தது கைவிடப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை அல்ல. தானும் ஒரு கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகிவிடமாட்டேன் என்பதை உறுதி செய்து கொள்வதே அவனது நோக்கமா இருந்தது.

ப்ருஸ், ஐந்து வயதுச்சிறுவன். அவன் முதல்முதலாக பாலர் பள்ளிக்கு போயிருந்த போது கூட வந்திருந்த அம்மாவிடம் அங்கிருந்த சுவரில்

வரையப்பட்டிருந்த ஓவியங்களைச் சுட்டிக்காட்டி இவ்வாறு கேட்டான்:
'யார் இந்த அசிங்கமான படங்களை வரைந்தது?'
தாயாருக்கு தர்மசங்கடமாகிப் போய்விட்டது. அவள் மகனை அப்படிப் பேசக்கூடாது என்று கண்டிப்பது போல் பார்த்தபடி மெதுவாகக் கிசுகிசுத்தாள்.

'இவ்வளவு அழகான படங்களை அசிங்கம் என்று சொல்வது சரியல்ல'
ஆசிரியருக்கு அவனது கேள்வியின் அர்த்தம் புரிந்துவிட்டது. அவர் புன்னகைத்தபடியே சொன்னார்: 'நீங்கள் இங்கே அழகான படங்களைத்தான் வரையவேண்டுமென்றில்லை. உங்களுக்கு விருப்பமானபடி நீங்கள் வரையலாம்.'
ப்ரூஸின் முகத்தில் பெரிய புன்னகை ஒன்று தோன்றியது அவனுக்கு. அவனது மனதில் புதைந்திருந்த கேள்விக்குரிய பதில் இப்போது கிடைத்துவிட்டது. "ஒருசிறுவன் அழகாக படங்களை வரையாவிட்டால் என்ன நடக்கும்.?"
அடுத்ததாக ப்ரூஸ் அங்கிருந்த ஒரு உடைந்த தீயணைக்கும் இயந்திரத்தை எடுத்து நேரடியாகவே கேட்டான்.
"இதை உடைத்தது யார்?"
"இதை உடைத்தவர் யாராயிருந்தால்தான் என்ன? இங்கு இருப்பவர்கள் எவரையும்தான் உனக்குத் தெரியாதே ஏன்தான் இப்படிக் கேட்கிறாய்?"
உண்மையில் ப்ரூசின் நோக்கம் பெயர்களை அறிவதல்ல அவனுடைய நோக்கமெல்லாம் விளையாட்டுப் பொருட்களை உடைப்பவர்களுக்கு என்னநடக்கும் என்பதுதான். கேள்வியைப் புரிந்துகொண்ட ஆசிரியர் சரியான பதிலைத் தந்தார்.
"விளையாட்டுப் பொருட்கள் விளையாடுவதற்குத்தானே? அவை சிலவேளைகளில் உடைவதுதானே."
"இந்தப் பெரியவர் (ஆசிரியர்) நல்லவர். இவர்விரைவில் கோபமடைய மாட்டார். ஒருபடம் மோசமாக, அசிங்கமாக வரையப்பட்டாலோ ஒரு விளையாட்டுப் பொருள் உடைந்தாலோ அவர் கோபமடையப் போவதில்லை. நான் பயப்படவேண்டியதில்லை. இங்கே தங்குவதில் எந்தப்பயமுமில்லை"
ப்ரூஸ் தாயருக்கு கைகாட்டிவிட்டு தனது பாலர் பாடசாலையின் முதல் நாளை ஆரம்பிக்கத் தொடங்கினான்.
கரோல், பன்னிரண்டு வயதுச்சிறுமி. அவள் மிகவும் வேதனையடைந்தவளாக கண்ணீர்மல்க நின்றிருந்தாள். அவளது விருப்பத்திற்குரிய மைத்துனி கோடைகால விடுமுறைக்கு தனது வீட்டிற்கு அவளைவிட்டுப் போகப்போகிறாள்.

கரோல்: (கண்ணீர்மல்க) சுசி போகப்போகிறாள். நான் திரும்பவும் தனிமையில் இருக்கப்போகிறேன்.
தாய்: உனக்கு இன்னொரு சிநேகிதி கிடைப்பாள்.
கரோல்: நான் சரியாக தனிச்சுப் போவேன்.
தாய்: உனக்கு அது பழகிப் போய்விடும்.
கரோல்: ஓ.. அம்மா (அழுகிறாள்)
தாய்: உனக்கு பன்னிரண்டு வயதாகிவிட்டது. இன்னும் ஒரு அழுகுனிப்பாப்பாவாக இருக்கிறாய்.
கரோல் தாயை முறைத்துப் பார்த்துவிட்டு தனது அறைக்குள் ஓடிப்போய் கதவை மூடிக்கொண்டாள்.
இந்தச் சம்பவம் ஒரு சந்தோசமான முடிவுக்கு வந்திருக்கமுடியும்.
ஒரு குழந்தையின் உணர்வு மிகவும் காத்திரமான ஒன்றாக கருதப்படவேண்டும். அந்த விடயம் ஒன்றும் முக்கியத்துவம் அல்லாததாக இருப்பினும் கூட. கோடைகால விடுமுறைப்பிரிவு ஒருதாயின் கண்ணில் அழுவதற்கு உரியதல்லாத சின்னவிடயமாக இருக்கலாம். ஆனால் அதற்காக தாயின் அனுதாபம் சிறிய ஒன்றாக இருக்கவேண்டிய அவசியமில்லை.
"நல்ல கவலையாக இருக்கிறாள் கரோல். அவளை கவலைப்படுத்துவது என்ன என்பதை நான் விளங்கிக்கொள்கிறேன்."
என்று காட்டுவதன் மூலம் அவளுக்கு என்னால் உதவ முடியும் என்று தாய் நினைத்திருந்தால் இப்படிக் கூறியிருக்க முடியும்:
"சுசி இல்லாமல் தனிமையாக இருக்கும்."
"உனக்கு அவள் இல்லாவிட்டால் கவலையாக இருக்கும் என்ன?"
ஒன்றாக இருந்த ஒருவரைபிரிந்து இருப்பது என்பது கஷ்டமான ஒன்றுதான். அவள் இல்லாவிட்டால் வீடே வெறிச்சென்று இருக்கும் என்ன?"
இத்தகைய அனுகுமுறை பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையில் அன்னியோன்யத்தை வளர்க்கும். குழந்தை தனது கவலையை புரிந்துகொள்ளப்டுவதாக உணரும் பட்சத்தில் அதன் துயரம் இல்லாது போய்விடுதம். ஏனென்றால் அவர்கள் விளங்கிக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களது தாய்மீதான அன்பு இதனால் ஆழமாகிறது. ஏனென்றால் அவள் விளங்கிக் கொள்கிறாள். தாயின் அனுதாபம் உணர்வுபூர்வமான முறையில் அவர்களது ஆளமையை தட்டிக்கொடுக்கிறது.

–தொடரும்–

## அன்பான சிறுவன்

ஒரு சிறுவன் ஒருநாள் வீதியோரமாக சென்று கொண்டிருந்தான். அப்போது அவ்வழியாக ஒரு வயோதிபர் வந்து கொண்டிருந்தார். அவர் பார்ப்பதற்கு அருவருப்பான ஆடையும் கைகால்கள் வீங்கியும் உடல்முழுவதும் புண்களுடனும் உதடுகள் காய்ந்தும் காணப்பட்டார்.

அதைப் பார்த்த அச்சிறுவன் அவர் மீது பரிதாபப் பட்டான். அப்பொழுது அப்பெரியவர் அந்த சிறுவனைப்பார்த்து மிகவும் தாழ்ந்த குரலில் தனக்கு பசியாகவும் தாகமாகவும் இருப்பதாகவும் கூறினார். அதைக் கேட்ட அச்சிறுவன் கொடுப்பதற்கு ஏதும் இன்றி மிகவும் மனம் வருந்தி அப்பெரியவரின் கையைப் பிடித்து ஐயா! என்னிடம் உங்களுக்கு கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்று கூறினான்.

அதைக் கேட்ட அப்பெரியவர் அச்சிறுவனைப் பார்த்துமனம் மகிழ்ந்து அதற்க்கு என்ன மகனே! உனது அன்பும் பணிவும் எனது பசியைப் போக்கி விட்டது என்று கூறி வாழ்த்தி விடைபெற்றார்.

(பெரியோர்களிடம் அன்பு செலுத்த வேண்டும்.)

# பூமி



சூரியக்குடும்பத்தில் ஐந்தாவது பெரிய கோள் பூமியாகும். இதன் விட்டம் பூமத்தியரேகை ஊடாக 12,756 கி.மீ (7926 மைல்கள்) ஆனால் வடதென்துருவ வழியாக இதன் விட்டம் 12,713 கி.மீ (7899 மைல்கள்) இதன் எடை 5976 மில்லியன் மில்லியன் மில்லியன் மில்லியன் மெற்றிக் தொன்.

பூமியை குறுக்கு வெட்டாகப் பார்த்தால் அதன் உட்புறம் அடர்தியாகவும் கனமாகவும் இருக்கக்காணலாம். பூமி தோன்றிய காலத்தில் கனமான பொருள்களான இரும்பு நிக்கல் போன்றவை இப்படி தங்கின இதற்கு அடுத்த வெளிப்பகுதி வெப்பமாகவும் திரவமாகவும் உள்ளது. அதை அடுத்துள்ள பகுதி தடித்துள்ளது. இது பெரும் பாறைகளைக் கொண்டது. அதற்கு மேலுள்ள பகுதி நாம் வசிக்கும் மேற்பகுதி. நாம் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பல பொருட்களையும் கொண்டுள்ள பகுதி.

பூமியை மூன்று வகையாகப் பிரிக்கலாம்

1. வளி மண்டலம்.
2. நீர் மண்டலம்.
3. நில மண்டலம்.

இவற்றுள் வளி மண்டலம் பன்னிரண்டு மண்டலங்களுக்கும் மேலே உள்ளது.

பூமியின் மேற்பகுதியை மூடியுள்ள பகுதிகள் நீரும் நிலமும். நீர் 70.8$^0_0$ மிகுதி நிலப்பகுதி.

# தாயின் அன்பு

ஆட்டுக்குட்டி ஒன்றுக்கு எப்போது பார்த்தாலும் வெளியே போய் விளையாட வேண்டும் என்று விருப்பம். அதன் அம்மாவுக்கோ எப்போது பார்த்தாலும் முதலைகளை நினைத்தால் பயம். அதனாலே தனதுகுட்டி எங்குமே போகக்கூடாது என அது எச்சரித்தது.

ஒருநாள் ஆட்டுக்குட்டி. அம்மாவின் சொல்லைக் கேட்காமல் ஆற்றங்கரை ஓரமாகப்போயிற்று. தன்னிடமிருந்த இசைக்கருவியை மீட்டியவாறே அது பாடத் தொடங்கிற்று.

அந்த சத்தத்தைக் கேட்ட முதலை ஆற்றுக்குள்ளே இருந்து தலையை நிமிர்த்திப் பார்த்தது. ஆட்டுக்குட்டியைக் கண்டதும் அதற்கு வாயிலே நீர் ஊறிற்று.தந்திரம் பண்ணி ஆட்டுக் குட்டியைப் பிடித்துச் சாப்பிட முதலை எண்ணிற்று. மெதுவாக முதலை ஆற்றங்கரை ஓரமாகச் சென்றது தன்னை மறந்து பாடிக்கொண்டிருந்த ஆட்டுக் குட்டியைப்பார்த்து. "ஆகா.. நீ எவ்வளவு அழகாகப் பாடுகிறாய் என் அருமை நண்பனே" என்று கூறிற்று.

இதைக் கேட்ட ஆட்டுக்குட்டிக்கு மிகுந்தமகிழ்ச்சி உண்டாயிற்று. ஆட்டுக்குட்டி இன்று. தான் முதல் முறையாக முதலையைப் பார்க்கின்றது.

"மிகவும் நன்றி பெரியவரே.." என்றது ஆட்டுக்குட்டி.

முதலை தலையை ஆட்டிற்று. பிறகு.


"என் அன்பான சங்கீத வித்துவானே. இவ்வளவு இனிமையாக இந்த இசைக்கருவியை மீட்டுகிற உன் கையைத்தொட்டு பார்க்க எனக்கு ஆசையாக இருக்கிறது. எங்கே என் கிட்டே வந்து உன் கையை நீட்டு நண்பனே.."என்று இனிமையாகக் கூறியது. இந்த நிகழ்ச்சியை ஆற்றங்கரையிலே நின்று பப்பி என்ற நாய்க்குட்டி பார்த்துக்கொண்டு நின்றது. முதலை


ஆட்டுக்குட்டியைப் பிடித்துத் தின்னப் போகின்றது என பப்பி தெரிந்து கொண்டது. பப்பி உடனே உரத்த சத்தத்துடன் குரைத்துக் கொண்டு அங்கே ஓடி வந்தது.

இதனால் ஆட்டுக்குட்டிக்கு பப்பியின் மீது மிகுந்த கோபம் ஏற்பட்டது. மறுகணமே பப்பியை நோக்கி ஆட்டுக்குட்டி கோபத்துடன் பாய்ந்த. ஆட்டுக்குட்டியை தேடிக்கொண்டு தாய் ஆடு அங்கே ஓடி வந்தது. ஆற்றங்கரையிலே பப்பியை தனது குட்டி துரத்திக்கொண்டு ஓடுவதை ஆடு கண்டது. என்ன நடந்ததென்று தனது குட்டியை. எச்சரிக்கை செய்தது. புத்திமதியும் கூறியது.

"பெற்றோர் சொல்வதை எப்போதும் கேட்டு நடக்கவேண்டும்." அதைவிட தீயோரையோ அவரது வார்த்தைகளையோ ஒருபோதும் நாம் நம்பக்கூடாது. என்றது தாய் ஆடு.

ஆட்டுக்குட்டியும் அன்றிலிருந்து தாயின் சொல்லைக் கேட்டு நடந்து வந்தது.





செ.யோகநாதன்

## டிசம்பர் மாதம்

"டிசம்பர்" பன்னிரண்டாவது மாதமாகும். ஆனால் இதன் உண்மையான அர்த்தம் என்ன தெரியுமா? இச்சொல் "டெக்கா" எனும் கிரேக்க சொல்லிலிருந்து உருவானது. கிரேக்கத்தில் "டெக்கா" என்றால் பத்து என்று பொருள். எனவே தான் பத்துலீற்றருக்கு டெக்கா என்கிறோம். இந்த 'டெக்கா' என்னதிலிருந்து உருவான டிசம்பரும் பத்தாவது மாத்தைத்தான் குறிப்பதாய் இருக்கவேண்டும். ஆனால் அது பன்னிரண்டாவது மாதமாய் இருப்பதற்கு என்ன காரணம்?

இன்று நாம் உபயோகிக்கும் நாட்குறி முறை ஆதி ரோமியர்களிடமிருந்து பெறப்பட்டதாகும். ஜுலியஸ் சீசருக்கு முன் வழக்கிலிருந்த முறையின்படி 'மார்ச்' மாதமே ஆண்டின் முதல் மாதமாகும். அப்போது 'டிசம்பர்' பத்தாவது மாதமாயிருந்தது. பின்பு புத்தாண்டு தினம் ஜனவரி முதல் நாளுக்கு மாற்றப்பட்டது. ஆனால் மாதங்களின் பெயர் இதற்கேற்ப மாற்றப்படவில்லை. இதனால் தான் சில மாதங்களின் பெயர் அர்த்தம் ஒன்றாகவும் ஆண்டில் அம்மாதங்களது வரிசை எண் வேறொன்றாகவும் ஆகிவிட்டது.

| மாதம் | அர்த்தம் | வரிசைஎண் |
|---|---|---|
| செப்டம்பர் | செப்டம்–ஏழு | ஒன்பதாவது |
| அக்டோபர் | அக்டோபர்–எட்டு | பத்தாவது |
| நவம்பர் | நவம்–ஒன்பது | பதினோராவது |
| டிசம்பர் | டெக்கா–பத்து | பன்னிரண்டாவது |

( நன்றி விளையாட்டுக்கணித முன்னேற்றப்பதிப்பகம் மாஸ்கோ)

# அர்த்தங்கள்:- இன்றும் அன்றும்

* 'களவும் கற்று மற' என்று கூறப்படுகிறது.

இது தவறு

'களவும் கத்தும் மற' என்பதே சரியானது. முன்னர் இவ்வாறே இருந்தது. பின்னர் பேச்சு வழக்கில் தவறு புகுந்துள்ளது.

இதன் பொருள்

களவையும் சூதையும் மறந்து விடு.

* "ஆயிரம் பேரைக் கொன்றவர் அரைவைத்தியர்"

இது தவறு

தமிழ் வைத்தியம் என்பது மூலிகைகளை அடிப்படையாகக் கொண்ட சித்தவைத்தியம். இலை, தழை, பூ, காய், கனிகளோடு வேரும் முக்கிய இடம்பெறும். வேரில் ஆய்வு நடத்தியவரே வைத்தியராவார். வைத்தியத்தில் தகுதி பெற குறைந்த அளவு இரண்டாயிரம் வேர்களின் குண நலன் களையாவது ஆராச்சி மூலம் கண்டறிந்திருக்க வேண்டும். இதைச் சுட்டிக்காட்டவே

"ஆயிரம் பேரைக் கொன்றவர் அரை வைத்தியர்" என்ற பழமொழி தோன்றியது.

## நாட்கள்

ஞாயிறு வாரத்தில் முதல் நாளாம்
ஞானமும் கல்வியும் தரும் நாளாம்.
ஆயினும் மறுநாள் திங்கள் வரும்
அனைவரும் சேர்ந்தால் நன்மை வரும்.

திங்களின் பின்னே செவ்வாயாம்
தினமும் நன்மை செய்வோமாம்.
எங்களின் கடமை கற்றிடலாம்.
ஏற்பது இகழ்ச்சி என்ற ிடலாம்.

கிழமையில் நடுநாள் புதன்கிழமை
கீழோர் ஆயினும் பணிந்திடுவோம்
இளமையில் பயின்றிடும் நற்குணங்கள்
என்றும் தொடர்ந்து வந்திடுமாம்.

வியாழன் வந்தால் நீந்திடலாம்
வீதியோரமே சென்றிடலாம்!
தியாகன் வருவான் விளையாட,
தின்பண்டங்களும் தந்திடுவான்!

வெள்ளி வந்தால் கொண்டாட்டம்.
வேணும் வரைக்கும் பந்தாட்டம்
துள்ளி மகிழ்வோம் சனிக்கிழமை
தொடர்ந்தே படிப்போம் படிப்புகளை.

## ராஜ மரியாதை

வலிமையும் கர்வமும் கொண்டு காட்டில் தனியே உலாவிக் கொண்டிருக்கும் சிங்கத்துக்கு ராஜ தந்திரமோ, கல்வியோ தேவைப்படவில்லை. அதனை மிருகங்கள் எல்லாம் 'ராஜா, ராஜா' என்று புகழ்ந்து மரியாதை செலுத்துகின்றன.

## வலிமையால் பெற்ற பதவி

சிங்கத்திற்கு முடிசூட்டு விழாவோ அல்லது வேறு சடங்குகளையோ மிருகங்கள் நடத்தி வைக்கவில்லை. சிங்கம் தன்னுடைய பராக்கிரமத்தினால் அரச பதவி வகித்து ஆட்சி செலுத்துகிறது.

## வீரத்தின் சிறப்பு

யானையின் மாமிசமே சிங்கத்துக்கு விருப்பமான உணவு. இது கிடைக்காவிடில், அதற்காக சிங்கம் புல்லைதததின்னாது் தின்னாது.

# பத்துச் சத பலூான்

பத்துச் சத விலையிலே
பலூான் ஒன்று வாங்கினேன்.

பலூான் ஒன்று வாங்கினேன்
பையப் பைய ஊதினேன்.

பையப் பைய ஊதவே
பந்து போல ஆனது.

பந்து போல ஆனபின்
பலமாய் நானும் ஊதினேன்.

பலமாய் ஊத ஊதவே
பானை போல ஆனது.

பானை போல
ஆனதைக்
காண ஓடி வாருங்கள்!

விரைவில் வந்தால்
பார்க்கலாம்.

அல்லது வெடிக்கும்
சத்தம் கேட்கலாம்!



## எந்த முட்டை அவித்த முட்டை?

**முட்டைகளைக் கொண்டு சில வேடிக்கைகள் செய்துபார்க்கலாமா?**

முட்டைகளை நல்லதா கெட்டதா என்று அறிய, அல்லது வேகவைத்த முட்டையா, அவிக்காததா என்றறிய அவைகளை மேசை மீது சுழல விடுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம். எப்படி? கோப்பையில் முட்டைகளை வைத்து சுழலச் செய்யுங்கள். வெகு நேரம் சுற்றிச்சுழலும் முட்டை அவித்த முட்டை. அவிக்கப் படாத முட்டை, சிறிதுநேரம் சுற்றிப் பின் ஆடி அசைந்து ஓய்ந்து விடும்.



இப்போது ஒரு வேடிக்கை பாருங்கள்! அவித்த முட்டையையும் நல்ல முட்டையையும் சுழலச் செய்யுங்கள். அவை சுழன்று கொண்டிருக்கும் போது இரண்டையும் சட்டென்று நிறுத்துங்கள். உடனே இரண்டையும் பிடியிலிருந்து விடுவித்துச் சுழல விடுங்கள். என்ன? அவித்த முட்டை கோப்பையில் அசையாமல் இருக்கும் அவிக்காத முட்டை தானாகச் சுழல ஆரம்பிக்கிறதா?.. விந்தையாக இருக்கின்றது அல்லவா! இந்த நேர் மாறான செயல்?5

அவித்த முட்டையின் இந்த அதிசய அமைதியின் காரணம் அதன் உள்ளே இருப்பது திடப்பொருள். நல்ல முட்டையின் உள் இருப்பதோ திரவப் பொருள். நல்ல முட்டையில் உள்ள திரவத்தின் மையப்பகுதி அடுக்குகள் சுழலும் அசைவினால் பாதிக்கப்படுவதில்லை. திரவத்தின் மேல் பகுதி மட்டுமே சுழற்சிக்கு உட்பட்டு நகருகின்றது. சுழற்சி நிறுத்தப்பட்டதும் முட்டையினுள் ஏகமான உராய்தல் ஏற்படுகிறது ஆனால் திரவத்தின் மையப்பகுதி தன் சலனத்தை நிறுத்தவில்லை. ஆகவேதான், நீங்கள் மீண்டும் அவற்ரை விடுவித்துச் சுழல விட்டதும் அவித்த முட்டையைப் போல் அல்லாமல் திரவமுள்ள அவிக்காத முட்டை தானகவே மீண்டும் சுழலுகிறது–திரவத்தின் மையப்பகுதியில் சலனம் தொடர்ந்து இருப்பதினால் இது நிகழ்கிறது.

## பாதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என்று

வாழத்தும் பொழுது இரண்டே போதும் எனலாமா? இல்லை ஏனெனில் பதினாறு என்பது பிள்ளைகள் அல்ல அவை

பதினாறு செல்வங்களே!

அவையாவன..

1. புகழ்
2. கல்வி
3. ஆற்றல்
4. வெற்றி
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. அறிவு
9. பெருமை
10. ஆயுள்
11. நல்லூழ்
12. இளமை
13. துணிவு
14. நோயின்மை
15. நுகர்ச்சி
16. பொருள்

# தீக்கோழி

இன்று உலகில் வாழும் பறவைகளில் பெரியது தீக்கோழி. இதனால் பறக்க முடியாது. வேறு பறவைகளுக்கு மாறாக இதற்கு ஒவ்வொருகாலிலும் இரண்டு விரல்கள்தான் இருக்கும். ஒன்று மற்ரையதை விடப் பெரிதாக இருக்கும்.
இதன் பாதத்தைக் குழம்பு என்றே சொல்லாம்.
ஓடுவதற்க்கு வசதியாக அமைந்தவை. இவற்றில் இரண்டு வகை. ஒன்று இறகு வளராத கழுத்து, தலைப்பகுதி நீலம் கலந்த சாம்பல் நிறமாக இருப்பது கோமாலி வகை. மற்றையது சிவப்பாக இருப்பது சகாராவகை.



இதன் உடலில் மட்டுமே இறகுகள் மூடியிருக்கும். இதன் தலை சிறியது. இதன் அலகு தட்டையானது. அகன்ற உறுதியான அலகுகளையும் 'நீண்ட உறுதியான கால்களையும், பெரிய கண்களையும் கொண்டவை.
இவை மணிக்கு 40 மைல் வேகத்தில் ஓடக் கூடியவை. அடியெடுத்து வைப்பது 15 அடி நீளம் கூட இருக்கும் தற்பொழுது உயிர் வாழும் பறவைகளில் இதன் முட்டையே மிகவும் பெரியது. நீளம் 18 செ.மீ அகலம 13 செ. மீ 1.3 கி.கி (கிலோகிராம்) நிறையாகும்.

# சிறுவனின் அறிவு

ஒரு நாள் ஒரு அரசன் அதிகாயில் எழுந்து அரண்மனையிலிருந்து யன்னல் வழியாக வீதியை எட்டிப் பார்த்தான். அப்போது கடைகளில் சிந்திக் கிடக்கும் பொருட்களை சிறுவன் ஒருவன் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்தான்.

அரசன் தலையை உள்ளுக்குள் இழுத்த போது, யன்னலின் சட்டம் தலையில் இடித்துக் காயம் உண்டாகி சிறிது இரத்தம் கசிந்தது. "இன்று விடியற் காலையில் எழுந்து அந்தச் சிறுவன் முகத்தில் விழித்ததால் நமக்கு இரத்தக் காயம் ஏற்பட்டது. மேலும் இப்படியே, நாள் தோறும் இவன் முகத்தை எத்தனை பேர் பார்ப்பார்களோ? அவர்களுக்கு எல்லாம், என்னென்ன தீமைகள் நேரிடுமோ? ஆகையால், அந்த வெகுஜன விரோதியை சிரச்சேதம் செய்யுமாறு சேவகர்களுக்கு அரசன் உத்தரவு இட்டான்",

சேவகர்கள் சிறுவனைப் பிடித்து, விபரத்தைக் கூறி, சிரச்சேதம் செய்வதற்குக் கொண்டு சென்றார்கள், அப்பொழுது, அந்தச் சிறுவன், "நான் ராஜாவைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அதன்பிறகு, உங்கள் காரியத்தை நிறைவேற்றலாம்" என்று தயவுடன் கேட்டுக் கொண்டான். சேவகர்கள் அரசனிடம் அதைக்கூறி, அனுமதி பெற்று, அவனைக் கொண்டு போய் அரசன் முன் நிறுத்தினார்கள். அரசனை வணங்கி, "அரசர் பெருமானே! இன்று உங்களுக்கு ஏற்பட்ட சிறிய சங்கடம், என்முகத்தில் விழித்ததினால் உண்டாயிற்று என்று, என்னைச் சிரச்சேதம் செய்யுமாறு உத்தரவிட்டீர்கள். ஆனால், நானோ தூங்கி எழுந்து, முதன் முதலில் உங்கள் முகத்தைப் பார்த்ததால், எனக்குத் தலையை வெட்டக்கூடிய தண்டனை நேரிட்டதே! இதற்கு என்ன தீர்ப்பு என்று கேட்டுத் தெரிந்து கொண்டு பிறகு, என் தலையைக் கொடுக்கலாம் என்று வந்தேன் " என்றான் சிறுவன். அரசன் அதைக் கேட்டதும் திடுக்கிட்டு, சிறுவனுடைய அறிவைப் பாராட்டி, தண்டனையை ரத்துச் செய்து, அரண்மனையிலேயே அவனை வைத்துக் கொண்டான்.

# 7+7=14

ஏழும் ஏழும் பதினாலாம்.
எலியாருக்கு முழம்வாலாம்

அறைக்குள் எலியார் புகுந்தாராம்
அங்கும் இங்கும் பார்த்தாராம்

இரண்டு தட்டில் பணியாரம்
இருந்தது கண்டு மகிழ்ந்தாராம்.



கடித்துக் கடித்துத் தின்றாராம்
கணக்கைக் கூட்டிப் பார்த்தாராம்.

ஏழும் ஏழும் பதின்னாலாம்
எலியார் ஏப்பம் விட்டாராம்!


## நற்பழக்கங்கள்

அதிகாலையில் எழுந்து பழகு.
இரவில் வெகுநேரம் கண்விழித்து
தொலைக் காட்சி பார்க்காதே.
விரைவில் தூங்கச் செல்.
தினசரிப் பாடங்களை அன்றன்றே படி.
காலம் பொன் போன்றது.
முன்னதாகத் தூங்குவதும் அதிகாயில்
எழுவதுமே நல்ல உடல் நிலை.
வலிமை, செல்வச்சிறப்பு, அறிவு
அனைத்திற்கும் காரணம்

# பால்

உடலுக்கு தேவையான பல ஊட்டச்சத்துக்களைக் கொண்டது பால். அதனால் தான் அது சிறந்த உணவாகக் கருதப்படுகின்றது. தசைகளை வளர்க்கவும் இழப்பை ஈடு செய்யவும் தேவையான புரதச்சத்துப் பாலில் உள்ளது. செயல்ப் படுவதற்கு தேவையான ஆற்றலைத் தரும் கொழுப்பு இதில் உள்ளது. ஆற்றல் தரும் மற்றொரு பொருள் காபோ வைதரேட் ஆகும். இதில் உள்ள லக்டோஸ் எனப்படும் குழுக்கோஸ் சத்து உடலால் எழிதில் உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடியது. முக்கியமான கனிமப் பொருட்களும் பாலில் உள்ளன. ஏலும்பு மற்றும் இரத்த வளர்ச்சிக்கு இவை தேவைப்படுகின்றன. கல்சியமும் பொஸ்பரசும் நிறைய உள்ளன. இவை தவிர உடலின் செயல்ப்பாட்டை ஊக்குவிக்கும் விற்டமீன்களும் கொண்டது பால்.

$B_2$, A, B, C, D, விற்டமீன்களும் இதில் உள்ளன. ஒரு லீற்டர் பாலில் 110 கிராம் திட உணவுச்சத்து இருக்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக எளிதில் செமிபாடடையக் கூடியதாக இருப்பது இதன் சிறப்பு அம்சம் ஆகும்.



## ஒத்தகருத்துள்ள சொற்கள்

1. முகவரி – விலாசம்
2. இறைவன் – கடவுள், ஆண்டவன், ஈசன்
3. தினம் – நாள்
4. சந்தோசம் – மகிழ்ச்சி
5. மன்னன் – அரசன், வேந்தன், கோன்
6. சண்டை – சமர், போர், யுத்தம்
7. ஆகாயம் – விண், வான், வானம், விசும்பு
8. இல்லம் – வீடு, மனை, அகம்
9. பகைவர்கள் – எதிரிகள், விரோதிகள்
10. பள்ளிக்கூடம் – பாடசாலை, வித்தியாசாலை, கல்விநிலையம்

## எதிர் கருத்துள்ள சொற்கள்

1. அடி – நுனி
2. அண்மை – தொலைவில்
3. ஆக்கல் – அழித்தல்
4. ஆதி – அந்தம்
5. ஆரம்பம் – முடிவு
6. பிறப்பு – இறப்பு
7. இருள் – ஒளி
8. இரகசியம் – பரகசியம்

## எமது முயற்சியின் வெற்றி..

ஐரோப்பியச் சூழலில். பெரியவர்களுக்கான பத்திரிகைத் தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் குழந்தைகள் அல்லது சிறுவர் இதழ் என்று கூறிக்கொள்வதற்கு, ஜேர்மனியில் இருந்து வரும் "சிறுவர் அமுதம்" ஒன்று மட்டும்தான். அதையும், அடுத்த கட்ட வளர்ச்சிக்கு நகர்த்துவது பற்றி அதன் ஆசிரியர் சின்ன இராஜேஸ்வரன் ஆலோசித்திருந்தார். ஆனால் ஐரோப்பியச் சிறார்களின் துர்அதிஸ்ரடம் சின்ன இராஜேஸ்வரன் அவர்களின் அகால மரணம். அப்பத்திரிகையின் மறுமலர்ச்சியைத் தடைப் படுத்தி விட்டது. இருந்தும் அவரது. ஒரே மகள் சின்னவயதுச் சிறுமி பிங்கலை மூலம். இச்சிறுவர் இதழ் தொடர்ந்து வருவது ஆச்சரியம்தான். ஐரோப்பியத் தமிழ்ச் சிறார்களின் தமிழ் ஆர்வத்தை பிரகாசிக்கவைப்பதற்கு இந்த ஒரு பத்திரிகை மட்டும் போதுமானதல்ல.

இன்நிலையில் ஐரோப்பியத் தமிழ்ச் சிறார்களுக்கான பத்திரிகையின் தேவை இன்றும் இடைவெளியாகவே இருக்கிறது. "வாழை" இதழ் சிறுவர்களுக்கான அம்சங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. காலப்போக்கில் சிறுவர்களின் ஆர்வத்தையும், பெற்றோரின் தூண்டுதலையும் பொறுத்து முழுமையான ஒரு சிறுவர் இதழாக வெளிவர வேண்டும் என்பது எமது எண்ணமும் விருப்பமும்.

இச் சிறுவர்களுக்கான இதழ், முக்கியமான மூன்று கடமைகளைச் செய்ய இருக்கிறது. ஒன்று எமது மண்ணின் வாசனையை எமது சிறார்களுக்கு உணர்த்துவது. இரண்டு சிறுவர்கள் வாழும் சூழலை அடிப்படையாக வைத்து தாய் மொழியை கற்பதற்கான ஆர்வத்தை உண்டு பண்ணுதல். மூன்று நவீன உலகில் பிள்ளைகளுடனான பெற்றோரின் உறவு பற்றிய உழவியல் ஆய்வுக் கட்டுரைகளை பெற்றோரின் தேவை கருதி பிரசுரிப்பது.

இம்முயற்சியை பூர்த்தி செய்வதற்குரிய ஆக்கங்களை மொழி பெயர்புக்களை எமது சிறார்கள் மீது அக்கறை கொண்ட, எழுத்தாற்றலும் மொழியாற்றலும் மிக்க அனைவரிடமும் இருந்து எதிர் பார்கிறோம். இதனால் ஏனைய விடையங்கள் எம்மிடம் கைவசம் இருப்பதாக அர்த்தம் கொள்ளத் தேவையில்லை. அதற்கான உதவிகளையும் எழுத்தாற்றல் மிக்க அனைவரிடமும் இருந்து எதிர் பார்க்கிறோம்.

குழந்தைகளுக்கான, சிறார்களுக்கான கவாச்சியுடன் பல வர்ணப்படங்களுடன் வாழை வெளி வரவேண்டும் என்பது எமது ஆசை. ஆனால் அதற்கான நிதித் தொகையும், அதற்கேற்ப தனிப்பிரதியின் விலையில் ஏற்படும் உயர்வும் எமது மக்களுக்குச் சுமையாக இருக்க கூடும் என்பதை உணர்ந்து தற்காலிகமாக தவிர்த்துள்ளோம். கால ஓட்டம் இதன் தேவையை எமது மக்களுக்கு உணர்த்தும் போது, நாமும் இசைந்துபோகத் தயாராக உள்ளோம் என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறிக் கொள்ள முடியும்.

சிறார்களுக்கான தமிழ் ஆர்வத்தைத் தூண்டுவதிலும் சிந்தனைத்திறனை ஊக்குவிப்பதிலும், எமது மண்வாசனையை உணர்ந்து கொள்வதற்கும், குழந்தைகளை நெறிப்படுத்துவதில் பெற்றோர்க்கு உதவியாக இருப்பதற்கும், இவ்மாத இதழ் சிறு அசைவை உண்டு பண்ணுமாக இருந்தால் அதுவே எம்மைத் திருப்திப்படுத்தும் இச்சிறு முயற்சியின் வெற்றியாக அமையும்.


" ஆசிரியர் குழு"

இச்சஞ்சிகை தொடர்பான உங்களின் கருத்துக்களையும் உங்களின் ஆக்கங்களையும் சகல நலன்விரும்பிகளிடமும் வாசகர்களாகிய உங்களிடம் இருந்தும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்

நன்றி
"ஆசிரியர் குழு"

தொடர்புகளுக்கு

**VALLY**
**P,SUTHAGAR**
**GASOMETER STR ,20**
**8005 ZÜRICH**
**SWIZERLAND**
**T,P, 01.272 64 45**



# VALLY MONTHLY MAGAZINE

MARCH 07.03.97